பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 16 | வியாழக்கிழமை | 31.08.2023 | அதிர்வு 30

## 15 கிலோ தங்கம் நேற்று தமிழ்நாட்டில் சிக்கியது!

(என்.புவியரசன்)

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 15 கிலோ தங்கம் இந்தியாவின் தமிழ் நாட்டில் நேற்றைய தினம் அகப்பட்டுள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. 03

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வடிக்கும் கண்ணீரை எவரும் கொச்சைப்படுத்தவே முடியாது

## அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்கிறார் அமைச்சர் விஜயதாஸ

“காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வலியும் வேதனையும் அரசுக்குத் தெரியும். அந்த உறவுகள் வடிக்கும் கண்ணீரை எந்தத் தரப்பும் கொச்சைப்படுத்த முடியாது. கொடூர வேதனையில் துடிக்கும் அந்த உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும்.”

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்று நீதி கோரி வடக்கு, கிழக்கின் பல்வேறு இடங்களில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். 03



# தமிழரின் விடுதலை வேட்கையை பேரினவாதத்தால் அடக்க முடியாது

## கிளிநொச்சியில் மாவை சூளுரை

கிளிநொச்சி, ஓகஸ்ட் 31

“தமிழர்கள் மீது என்னதான் பிரச்சினைகளைப் பேரினவாத அரசு ஏற்படுத்தினாலும் தமிழர்களின் விடுதலை வேட்கையை அடக்கி ஒடுக்க முடியாது.”

- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். 03




## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது?

# பொறுப்புக்கூறும் விடயத்தில் இருந்து இலங்கை அரசு தப்பிக்கவே முடியாது!

## - சம்பந்தன் எம்.பி. சுட்டிக்காட்டு

“வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? இந்தக் கேள்விக்கு இலங்கை அரசு பதில் சொல்லியே ஆக வேண்டும். 03





## தமிழருக்கான தீர்வு விடயத்தில்

# ஐ.நாவின் தலையீடு மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்

## வதிவிடப் பிரதிநிதியிடம் சம்பந்தன் வலியுறுத்தல்

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்வதில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடும் வகிபாகமும் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் 03

## இரகசியம்



வடக்கு மாகாண ஆளுநர் கதிரை என்பது எப்போதும் சூடானதுதான். ஆற, அமர இருந்து பணியாற்ற விட மாட்டார்கள். பதவிக் கதிரையின் காலைக் கொக்கி போட்டு இழுத்து வீழ்த்த மறைகரங்கள் எப்போதும் உஷாராகவே தயாராகக் காத்திருக்கும். 03

# நிந்தவூரில் யானைகளுடன் நித்தம் ஓட்டச் சமர்தான்!





அம்பாறை மாவட்டம் நிந்தவூர் அட்டப்பள்ளம் பிரதேச பிரதான வீதியில் நேற்று மாலை வீதியால் சென்ற நபரை நோக்கி யானை பின்தொடர்ந்து கலைத்துச் செல்வதையும் அந்த நபர் வேகமாக தனது சைக்கிளை ஓட்டி தப்பிச் செல்ல முயல்கின்றமையையும் காணலாம்.

(படம்:- பௌசுல் றிபாஸ்)

# நேற்றும் தையிட்டியில் போராட்டம்









தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் நடைபெற்றது.

நேற்று போயா தினத்தில் திஸ்ஸ விகாரையில் வழிபாடுகள் நடாத்துவதற்கு சிங்கள பௌத்தர்கள் வருகை தந்தமைக்கு எதிர்ப்புத் தொரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இராணுவ வாகனத்தில் சிவில் உடைகளில் வந்தவர்கள்அந்த விகாரைக்குள் சென்று வழிபாடுகளை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தில் எம்.பிக்களான தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.


# மன்னாரில் இரண்டு இளைஞர்கள் போதை மாத்திரைகளுடன் கைது

(மன்னார் நிருபர்)

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மன்னார் உப்புக்குளம் மற்றும் மூர்வீதி பகுதியை சேர்ந்த இரு இளைஞர்கள் போதை மாத்திரைகள் மற்றும் போதை பொருள் அடங்கிய சிகரெட்டுடன் இன்று புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 21 மற்றும் 22 வயது இளைஞர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதவியில் இருப்பவர்தான் மிக அவதானமாக இருக்க வேண்டும். சூதானமாக நடக்க வேண்டும்.

இப்போது வட மாகாண ஆளுநர் சில செயலாளர்களை இங்கும் அங்குமாக மாற்றி அமைத்திருக்கிறார். காரணத்துடன்தான்.

ஆளுநரின் பெயரில் சில அனுமதி விடயங்களை ஒட்டிப் பரிந்துரைக் கடிதங்கள் தாராளமாகவே விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. சில பரிந்துரைகளுக்கு ஆளுநர் வழிப்படுத்தல் வழங்கி இருந்தார். ஆனால் அந்தக் கணக்கில் பல பரிந்துரைகள் பறந்திருக்கின்றனவாம். விவகாரம் வெளியே தெரிய வந்தால் கவுண்டமணி – செந்தில் வாழைப்பழக் கணக்குச் சர்ச்சை மாதிரி 'அதுதான் இது!' என்று பதிலளிக்கலாம் என நினைத்திருப்பார்கள் போலும். ஆனால் விடயம் விவகாரமாக ஆளுநர் அம்மாவிடம் சிக்கிவிட்டதாம். பழைய ஆளுநரின் பரிந்துரை என்று கணக்கு காட்டலாம் எனப் பார்த்தார்கள். ஆனால் நீண்ட திகதி வேறுபாடு அதற்கு ஒத்துவரவில்லை.

அதனால் நம்பிக்கை அடிப்படையில் அங்கும் இங்குமாகச் செயலாளர்களை மாற்றி இருக்கின்றார் அம்மா.

அதனை ஆட்சேபித்து – அந்த நடவடிக்கையை வேறு விதத்தில் அர்த்தப்படுத்தி – கொழும்பு மேலிடத்துக்கு முறையீடுகள் பறந்திருக்கின்றன.

வடக்கு அரசியல்வாதி ஒருவர் இப்போது ஜனாதிபதி ரணிலுக்கு மிக இஷ்டமானவர். பழைய பதவியில் இருந்த போது பிரதமர் ரணிலைச் சந்திக்க விரும்பவில்லை என்று கூப்பாடு போட்டவர்தான் அவர். இப்போது ஜனாதிபதி ரணிலின் வலது கை. ரணிலின் அரசில் முக்கிய பதவி கிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவருக்கும் ஜனாதிபதி ரணிலின் கொழும்புச் செயலகத்தின் மூத்த அதிகாரிகளுக்கும் அதனால் இப்போது இஷ்டம். நல்லுறவு அதிகம். தொடர்பாடல்களும் நெருக்கம். அதை வைத்து, அவர் மூலமே ஆளுநர் அம்மாவுக்கு எதிரான வத்தி ஆழமாக வைக்கப்படுவதாகத் தகவல்.

முன்னைய ஆளுநர் அந்தப் பதவியில் தொடர வேண்டும் என்று ஜனாதிபதி ரணிலுக்கு எழுத்தில் பரிந்துரைத்தவர் இந்த அரசியல்வாதி.

இப்போது யாழில் கிடைக்கும் தகவல்களை ரணிலின் செயலகத்துக்கு உருவேற்றி வழங்குவதன் மூலம் மீண்டும் புதிதாகப் பதவியேற்ற அம்மாவுக்கு ஆப்பு வைக்க முயற்சிக்கிறாரோ என்னவோ.... அவ்வளவுதான்! விக்கினங்கள் களைவதற்கு விக்னேஸ்வரனைத் தான் துதிக்க வேண்டும். ஆனால் அம்மாவோ கிறிஸ்தவராயிற்றே.... ஆகவே பொருந்தி வராதுதான்...!

## காணாமல் ஆக்கப்பட்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

"நீதி அமைச்சர் என்ற ரீதியில் எனது கருத்தை நான் முன்வைத்துளேன். தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என மூவினத்திலும் பலர் காணாமல் போயுள்ளனர் – காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது." – என்றும் அவர் மேலும் கூறினார்.

## பொறுப்புக்கூறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொறுப்புக்கூறும் இந்த விடயத்தில் இருந்து இலங்கை அரசு தப்பிக்கவே முடியாது. இந்த விடயத்தில் ஐ.நா. உள்ளிட்ட சர்வதேச சமூகம், இலங்கை அரசை சும்மா விடாது."

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. தெரிவித்தார்.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் நேற்றாகும். இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே சம்பந்தன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இறுதிப் போரில் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது? இராணுவத்தினரிடம் உயிருடன் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? வடக்கிலும் கிழக்கிலும் கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? கைது செய்யப்பட்டு பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது? இந்தக் கேள்விகளுக்கு இலங்கை அரசு கட்டாயம் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதி கிடைக்க நாம் தொடர்ந்தும் போராடுவோம்." – என்றார்.

## தமிழரின் விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் நிர்வாகத் தெரிவு நேற்று கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகமான அறிவகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

"இதுவரை காலமும் தமிழர்கள் மீது இன ரீதியான ஒடுக்குமுறைகளைப் பேரினவாத அரசு மேற்கொண்டு வந்தது. இப்போது தமிழர்கள் மீது மத ரீதியான பிரச்சினைகளையும் பேரினவாத அரசு உருவாக்கியுள்ளது. என்னதான் பிரச்சினைகளை ஏற்படுத்தினாலும் தமிழர்களின் விடுதலை வேட்கையைப் பேரினவாத அரசால் அடக்கி ஒடுக்க முடியாது." – என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.குருகுலராஜா மற்றும் தமிழ் அரசுக் கட்சியின் செயற்பாட்டாளர்கள், மாவட்டக் கிளை நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## 15 கிலோ தங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டத்தின் உச்சிப்புளிப் பகுதியில் வைத்து மத்திய வருவாய்த்துறையினர் இதனைக் கைப்பற்றியுள்ளதாகத் தெதிவிக்கப்படுகின்றது.

இந்தத் தங்கத்துடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட தங்கம் தொடர்பில் இன்றைய தினம் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஐ.நாவின் தலையீடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் – அன்ட்ரூ ப்ரான்ஸிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மார்க் – அன்ட்ரூ ப்ரான்ஸ் கடந்த சில நாள்களாக நாட்டின் பல்வேறு முக்கிய தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றார்.

அந்தவகையில் மார்க் – அன்ட்ரூ பிரான்ஸுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில் நேற்று சந்திப்பு நடைபெற்றது. சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டிருந்தார்.

சந்திப்பின்போது தமிழ்ச் சமூகத்தின் மீது பாதிப்புக்களை ஏற்படுத்தும் விடயங்கள் தொடர்பாகவும், நாடு என்ற ரீதியில் பொதுவாக தாக்கங்களை ஏற்படுத்தும் விடயங்கள் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு வகிபாகமும் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் சம்பந்தன் எம்.பி. வலியுறுத்தினார். அதற்குப் பதிலளித்த மார்க் – அன்ட்ரூ ப்ரான்ஸ், இந்த விடயத்தில் இரு தரப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்தி எவ்வாறு ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பது பற்றி எதிர்வரும் காலங்களில் விரிவாகப் பேசலாம் என்று குறிப்பிட்டார்.

அதேவேளை, அண்மைய காலங்களில் சிறுபான்மையின மக்களுக்கு எதிராகப் பகிரங்கமான முறையில் வெளிப்படுத்தப்பட்டு வரும் இனவாதக் கருத்துக்கள் மற்றும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இடம்பெறும் பௌத்த – சிங்கள மயமாக்கல் என்பன உள்ளடங்கலாக தமிழ் மக்கள் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது மார்க் – அன்ட்ரூ ப்ரான்ஸிடம் எடுத்துரைக்கப்பட்டது.

அதுமாத்திரமன்றி இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஒரு தசாப்த காலம் கடந்துள்ள நிலையில், அதனை அடிப்படையாகக் கொண்டு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எதனையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை என்று சுட்டிக்காட்டிய சம்பந்தனும் சுமந்திரனும் இந்த விடயத்தில் இலங்கை அரசின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

# காணாமல்போனவர்கள் வெளிநாட்டில் என்று கூறும் 'ஜோக்'கை நிறுத்துங்கள்!

## ஜனாதிபதி ரணிலுக்கு மட்டக்களப்பில் வைத்து பிரதீப் எக்கினலிகொடவின் மனைவி சாட்டை




(கனகராசா சரவணன்)

இந்த நாட்டில் காணாமல் போனவர்கள் என்று எவரும் இல்லை எனவும், அவர்கள் வெளிநாடுகளில் இருக்கிறார்கள் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார். நீங்கள் ஜனாதிபதிதானே, அவர்களை வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு கொண்டுவர முடியும்தானே, எனவே இவ்வாறான ஜோக்கை நிறுத்துங்கள். இந்த அம்மாக்களுக்கு இந்த நாட்டில் என்றுமே நீதியை பெற்றுக் கொள்ள முடியாது. – என திருமதி சந்தியா பிரதீப் எக்கினலிகொட தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கானா சர்வதேச தினத்தை முன்னிட்டு "சர்வதேசமே எமக்கு நீதிவேண்டும்!" எனக் கோரி மட்டக்களப்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றஆர்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு கூறினார். கடத்தப்பட்டு காணாமல் போன பிரபல ஊடகவியலாளர் பிரதீப் எக்கினலிகொடவின் துணைவியார் சந்தியா நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியவை வருமாறு:–

பலாத்தகாரமாக கடத்தப்பட்டு காணாமல் போனவர்களது சர்வதேச தினம் இன்று. இலங்கையைப் போன்று உலகில் நீதிக்காக போராடியவர்கள் தன்னிச்சையாக அரச தலைவர்களினது அதிகாரங்களுக்கு பலியாக்கப்பட்டனர். அத்தகைய தமது அன்பார்ந்த உறவுகளை தேடும் பாதிக்கப்பட்ட உறவுகளின் நாள்.

வடக்கும் கிழக்கும் பலாத்தகாரமாகக் காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்கள் கண்ணீரில் மூச்சுவிட்ட பூமி ஆகும். எப்போதும் இந்த பூமியை நேசிக்கின்றேன் . இந்த இடத்துக்கு ஒவ்வொரு நாளும் வருவேன். ஏனென்றால் ஜனவரி 24 ஆம் திகதி கொழும்பு கொஸ்வத்தை பிரதேசத்தில் பலவந்தமாக எனது கணவரான ஊடகவியலாளர் பிரதீப் எக்கினலிகொட கடத்தி செல்லப்பட்டு, கடைசியாக அக்கரைப்பற்று இராணுவமுகாமிற்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

அவர் அங்கு எரிக்கப்பட்டாரா? அல்லது எங்காவது புதைக்கப்பட்டாரா? அல்லது கடலில் கொண்டு சென்று போட்டார்களா? தெரியவில்லை. இருந்த போதும் இந்த சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினத்தில் பல காரணங்களைத் தெரிவிக்க வேண்டியுள்ளது.

ஓ.எம்.பி. காரியாலயம் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக அதிகளவான பணத்தை வீண் செலவு செய்து நடாத்தி வருகின்றது. கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களை இந்த ஓ.எம்.பி. காரியாலயம் உண்மையாக – நீதியாக – தேடிக். கொடுத்துள்ளதா? குறைந்தது உண்மையையாவது அமைப்புகளுக்கு அது முன்வைத்தா? இல்லை.

இந்தத் தாய்மாருக்குத் தேவையானது உண்மையும் நீதியும். அது இந்த நாட்டில் நடைபெறாது என்பதால் தான் சர்வதேச அமைப்புக்களிடம் சொல்லவேண்டியுள்ளது. எனவே தெற்கில் இந்தச் சட்டத்துடன் மிகவும் கூடாதவிதத்தில் – முறையற்ற முறையில் –,முகம் கொடுக்க வேண்டியுள்ளது டன் மிகவும் வேதனையையும் அனுபவிக்க வேண்டியுள்ளது. இதனால் போராட்டங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஏன் என்றால் இந்த அம்மாக்களுக்கு இந்த நாட்டில் என்றுமே நீதியை பெற்றுக் கொள்ள முடியாது.

இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைக்கான குழு ஒன்று 2022 இல் ஐ.நாவில் நியமிக்கப்பட்டது . இந்த விசாரணைக்குழு இறுதிவரை இலங்கைக்கு வரவில்லை. அவர்களுக்கான விசாவுக்கான அனுமதியை வர்தமானி மூலம் தடைசெய்து அதனை ஜனாதிபதியின் வீட்டு காப்பெற்றின் கீழ் போடப்பட்டுள்ளது

எனவே சட்டத்தின் கீழ் அவர்கள் இலங்கைக்கு வர அனுமதிக்கவும். அதற்கான நீதியை வேண்டி எங்களுக்குச் செய்ய வேண்டும் என அரசாங்கத்துக்கு தெரிவிக்கின்றேன். – என்றார்.

# மஞ்சத்தில் வீதியுலா வந்த நல்லூரான்




நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவின் பத்தாம் நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி, தெய்வானை சமதேராக, முருகப்பெருமான் மஞ்சத்தில் வீதியுலா வந்தார்.

படங்கள் :- பிரபாகன் டிலக்சன்









# ‘அறகலய’ போராட்டக்காரர்களைத் திசை திருப்பவே இனவாத, மதவாத கருத்துக்களை கட்டவிழ்க்கின்றனர்

## ரெலோ பேச்சாளர் சுரேன் விளக்கம்

இதை ஆட்சி மாற்றத்திற்காக போராடியவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அறகலய போராட்டக்காரர்களுக்கு முறைமை மாற்றம் ஒன்றை செய்வோம் என்று உறுதிமொழி வழங்கியவர்கள் இன்று இனவாதத்தையும் மதவாதத்தையும்தூண்டுவதன்மூலம்தங்கள்உறுதி மொழிகளில் இருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறார்களா?

– இப்படிக் கேள்வி எழுப்புகின்றார் ரெலோ பேச்சாளர் கு சுரேந்திரன்.

நேற்றுத் தாம் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியிருக்கின்றார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:–

அறகலய போராட்டக் காரர்களை ஏமாற்றவே இனவாத மதவாத சக்திகள் முனைகின்றன.

இனவாத மதவாத சக்திகள் போராட்டக்காரர்களுக்கு வழங்கிய உறுதி மொழியிலிருந்து தப்பிக்க முயற்சிக்கிறார்களா?

இதை ஆட்சி மாற்றத்திற்காக போராடியவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அறகலய போராட்டக்காரர்களுக்கு முறைமை மாற்றம் ஒன்றை செய்வோம் என்று உறுதிமொழி வழங்கியவர்கள் இன்று இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டுவதன் மூலம் தங்கள் உறுதி மொழிகளில் இருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறார்களா?

இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி ஆட்சி பீடம் ஏறியவர்களை நாட்டு மக்களே தவறை உணர்ந்து கொண்டு அறகலயப் போராட்டத்தை முன்னெடுத்து துரத்தினார்கள். போராட்டக்காரர்கள் முன்வைத்த முறைமை மாற்றம் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு ஆறு மாத காலத்திற்குள் அதை செய்து முடிப்பதாக உறுதிமொழி வழங்கிவிட்டு இன்னும் அது பற்றி எதுவுமே செய்யாது உள்ளனர்.

மாறாக, மீண்டும் இனவாத – மதவாதக் கோஷங்களை எழுப்பிக் கொண்டு தாங்கள் போராட்டக்காரருக்கு வழங்கிய உறுதி மொழிகளை மடைமாற்றம் செய்து தப்பித்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். இதை ஆட்சி மாற்றத்திற்காகப் போராடியவர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக சரத் வீரசேகர, உதய கம்மாம்பில்ல, விமல் வீரவன்ஸ மற்றும் அரசியலில் ஈடுபட்டுள்ள புத்த பிக்குகள் உட்பட பலர் அறகலய போராட்ட காலத்திலும் பின்னரும் தலைமறைவாக அஞ்சி வாழ்ந்தனர். போராட்டக்காரர்களிடம் இருந்து தப்பிக்க அவர்களின் கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டனர். இன, மத பேதங்களை கட்டவிழ்த்து ஆட்சியாளர்கள் சிங்கள மக்களை ஏமாற்றி நாட்டைக் கொள்ளையடித்தனர் என்பதே போராட்டக் கார்கள் முன்வைத்த வாதம். அதற்கு பரிகாரமாக முறைமை மாற்றத்தை கோரினர். புதிய அரசியல் யாப்பினை உருவாக்கி அக்கோரிக்கையை நிறைவேற்ற உறுதிமொழி வழங்கி மூச்சு விட்டவர்கள், அதை நிறைவேற்றாமல்



இனவாத மதவாத கருத்துக்களை எழுச்சி பெற வைத்து நாட்டு மக்களை மீண்டும் ஏமாற்ற முயலுகிறார்கள்.

பொருளாதார சிக்கல்களில் இருந்து நாடு சுமுகநிலையை அடைந்து மீள முயற்சித்துக் கொண்டிருந்தாலும் முறைமை மாற்றம் சம்பந்தமாக எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் இதுவரை கைக் கொள்ளவில்லை. இந்த காலக்கெடு முடிந்து போராட்டக்காரர்கள் மீண்டும் தலையெடுத்து விடக் கூடாது என்பதற்காக தமிழ் மக்கள் மீது இனவாதத்தையும் மதவாதத்தையும் கட்டவிழ்த்துவிட்டு தங்கள் உறுதி மொழிகளில் இருந்து தப்பிப்பதற்கும் போராட்டக்காரர்களை ஏமாற்றுவதற்கும் முயற்சி செய்கிறார்களா என்ற சந்தேகம் உறுதியாகி வருகிறது.

சிங்கள மக்கள் – குறிப்பாக போராட்டக் காரர்கள் – இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இனவாத மதவாத சக்திகள் மீண்டும் ஆட்சி பீடம் ஏற இடமளிக்கக் கூடாது. இது ஒட்டு மொத்த நாட்டிற்கும் கேடு விளைவிக்கும். – என்று உள்ளது.

# கோதுமை மா இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தம்

கோதுமை மா இறக்குமதிக்கான அனுமதிப்பத்திர நடைமுறை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் கோதுமை மா இறக்குமதிக்கான ஏகபோக உரிமையை இல்லாதொழித்து போட்டிச் சந்தை முறையின் ஊடாக விலையைக் குறைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதேவேளை, ஒரு கிலோகிராம் கோதுமை மாவிற்கான இறக்குமதி வரி 16 ரூபாவிலிருந்து 27 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

# மஞ்சள் காய்ச்சல், மூளைக்காய்ச்சலுக்கான தடுப்பூசிகள் கைவசம் இல்லை எனத் தகவல்

மஞ்சள் காய்ச்சல் மற்றும் மூளைக் காய்ச்சல் ஆகியவற்றுக்கான தடுப்பூசிகள் நாட்டில் இல்லை என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க பிராந்தியத்தில் தொழில் நிமித்தம் செல்வோருக்கு மஞ்சள் காய்ச்சலுக்கான தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன என அமைச்சின் பிரதி பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஜி.விஜேசூரிய குறிப்பிட்டுள்ளார்.

அதற்காக ஒப்பந்தம் செய்துகொண்ட விநியோகஸ்தரால் சரியான முறையில் தடுப்பூசிகளை வழங்கப்படாத காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என அவர் கூறியுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்திடம் இருந்து அந்த தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள முயற்சித்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை.

அதற்கிணங்க, சம்பந்தப்பட்ட விநியோகஸ்தரிடமிருந்து விரைவில் தடுப்பூசியை இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு பயணிப்போருக்கு மூளைக்காய்ச்சலுக்கான தடுப்பூசிகள் செலுத்தப்படுகின்றன என சுகாதார அமைச்சின் பிரதி பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

எனினும், இந்த தடுப்பூசிகளும் தற்போது நாட்டிலுள்ள மருந்தகங்களில் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

குறித்த மருந்து தொகை, முற்பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவை எதிர்வரும் வாரங்களுக்குள் நாட்டிற்கு கிடைக்கும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சுபீட்சத்துக்கு வழி

நல்லிணக்கம், நிரந்தரத் தீர்வு, பொருளாதார மீட்சி இவை பற்றி எல்லாம் அதிகம் பேசும் ஜனாதிபதியும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட - வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான - சர்வதேச தினத்தை ஒட்டி, ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்ஸ் தெரிவித்துள்ள கருத்துக்களை ஒரு தடவை உற்று நோக்க வேண்டும்.

"வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விடயத்தில் உண்மையைக்கண்டறிந்து நிலைநாட்டுவது பாதிக்கப்பட்டவர்கள், உயிர் பிழைத்தவர்கள் குடும்பத்தவர்களுக்கு மிக அவசியமான விடயம். இதன் மூலம் மாத்திரமே காயங்களை ஆற்றும் நடவடிக்கை ஆரம்பமாக முடியும். நல்லிணக்க செயற்பாடுகள் ஆரம்பமாக முடியும்.

"வலிந்து காணாமலாக்கப்படுதல் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண்பது வெறுமனே நீதியுடன் தொடர்பட்ட விடயம் மாத்திரமல்ல, முன்னேற்றம், பேண்தகு அபிவிருத்தி போன்ற பாதையை இலங்கை உருவாக்குவதற்கும்து மிகவும் அவசியமானது" - என்று இலங்கைக்கான ஐ.நா. நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

நாட்டின் பேண்தகு அபிவிருத்தி, பொருளாதார மீட்சி போன்றவை வெறுமனே பொருளாதார திட்டங்களினால் மாத்திரம் சாத்தியமடைந்து விடமாட்டா. முதலில், இந்த நாட்டில் அமைதி, சமாதானம், நிரந்தர நல்லிணக்கம் என்பவை இருந்தால் மட்டுமே அபிவிருத்தியும் பொருளாதார மீட்சியும் சாத்தியமாகும்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விடயத்தில் உண்மைகள் கண்டறியப்பட்டு, சர்வதேச நியமங்கள் மற்றும் நீதி முறைமைகளுக்கு அமைய பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட்டு, தவறிழைத்தோர் அடையாளம் காணப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, பாதிக்கப்பட்டோருக்கு உரிய இழப்பீடுகள் வழங்கப்படுவதோடு, மீள நிகழாமையை உறுதி செய்யும் தீர்வுப் பொறி முறை உருவாக்கப்பட வேண்டும்.

இதுவே நாட்டில் சமாதானம், அமைதி, பொருளாதார சுபீட்சம் ஆகியவற்றைப் பெற்று தரும்.

ஆகவே நாடு இன்று இருக்கும் துரதிஷ்ட நிலையில் இருந்து, அதை மீட்பதற்கான வழிவகை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறும் வெறும் பொருளாதாரத் திட்டங்களில் மாத்திரமல்ல, அதையும் தாண்டி, புரிந்துணர்வு, நல்லிணக்கம், அமைதித் தீர்வு, இணக்கமான சூழ்நிலை என்பவற்றிலும் தங்கியுள்ளது என்பதை எல்லோரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நல்லிணக்கத்துக்கும், புரிந்துணர்வுக்கும், அமைதி தீர்வுக்கும், இங்கு பல்லாயிரக்கணக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்ட தமிழர்கள் தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட்டு, குற்றமிழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, பொறுப்பு கூறல் நிலை நிறுத்தப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆக, வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விடயத்தில் உண்மையை வெளிக்கொணரும் அரசியல் துணிச்சலும், திட சங்கடமும் தென்னிலங்கை அரசியல் தலைமைக்கு வராத வரை நல்லிணக்கமும் அதன் மூலமாக சுபிட்சமும் நாட்டுக்கு சாத்தியமேயற்றவை.

## ரூ29 கோடி பெறுமதி இரத்தினக் கற்களை கடத்த முயன்றவர் கைது

இரத்தின கற்களை சட்டவிரோதமாக சென்னைக்குக் கடத்திச் செல்ல முயன்ற பெண்ணொருவர் கைது செய்யப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

சுமார் 29 கோடி 10 இலட்ச ரூபாவுக்கும் அதிக பெறுமதியான இரத்தின கற்களை சட்டவிரோதமாக நேற்றுக் காலை கடத்தி செல்ல முற்படுகையிலேயே இந்தப் பெண் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்கத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒருகொடவத்த பகுதியை சேர்ந்த 30 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்க திணைக்கள அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

## திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களிலிலும் கன மழை!

திருகோணமலை மாவட்டத்தில் பல இடங்களில் மிக நீண்ட நாட்களின் பின் நேற்று மாலை வேலையில் கன மழை பெய்துள்ளது.

கடுமையான வறட்சி, வெப்ப நிலை அதிகரிப்பு எனப் பல இடர்களை மக்கள் எதிர் நோக்கி வந்த நிலையில் தற்போது மழை பெய்தமையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கிண்ணியா, தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை உட்பட பல இடங்களிலும் சுமார் 2 மணித்தியாலங்களுக்கும் மேலாக மழை பெய்துள்ளது. கடும் வறட்சி காரணமாக பல குளங்களில் நீரின்றி வரண்டு காணப்பட்டன.

## மட்டு. வாகரை விபத்தில் இரு இளைஞர்கள் காயம்

மட்டக்களப்பு - வாகரை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் உள்ள உசன ஏற்றம் எனும் பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டமாவடி பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் வாகரை பகுதிக்குச் சென்று மீண்டும் ஊர் திரும்பிச் சென்றபோது படி ரக வாகனத்தில் மோதியுள்ளனர்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த இருவரும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பெண் பொலிஸ் உத்தியோகத்தருக்கு பொலிஸ் நிலையத்திலேயே தொல்லை

பெண் பொலிஸ் உத்தியோகத்தருடன் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட பலாலி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

கடந்த 26 ஆம் திகதி இரவுவேளை கணினிப் பிரிவில் கடமையில் இருந்த பெண் பொலிஸ் அதிகாரியுடன், போதையில் இருந்த மேற்படி பதில் பொறுப்பதிகாரி பாலியல் அங்க சேட்டையில் ஈடுபட்டார் என்று அந்தப் பெண் பொலிஸ் அதிகாரியால் முறைப்பாடு வழங்கப்பட்டது.

இந்நிலையிலேயே குற்றஞ்சாட்டப்பட்ட அதிகாரி இடமாற்றப்பட்டமையுடன் ஒழுக்காற்று விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையின் நிர்வாகிகள்





இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் பொதுக்கூட்டமும், புதிய நிருவாகத் தெரிவும் நேற்றைய தினம் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தலைமையில், கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேசக் கிளைகளினதும் நிருவாகிகள், மாவட்ட மாதர் முன்னணி மற்றும் வாலிபர் முன்னணி நிருவாகிகளின் பிரசன்னத்தோடு நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தின் போது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும், செயலாளராக வீரவாகு விஜயகுமாரும், பொருளாளராக செல்வி அன்பழகி செல்வரட்ணமும், துணைத்தலைவராக வடக்கு மாகாண சபையின் மேனாள் கல்வி அமைச்சர் ததம்பிராஜா குருகுலராஜாவும், துணைச் செயலாளராக கரைச்சிப் பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதனும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை மாவட்டக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களாக திருமதி.கலைவாணி சிறீகாந்தன், திருமதி.குணலக்சுமி குலவீரசிங்கம், திருமதி.சிவயோகலட்சுமி சந்திரபோஸ், செல்வி.சுபிதா வேலாயுதபிள்ளை, திருமதி.உதயராணி சத்தியசீலன், பரமலிங்கம் பாஸ்கரன், திரு.சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், கறுப்பையா ஜெயக்குமார், சின்னையா தவபாலன், சுப்பிரமணியம் சுரேன் ஆகிய பத்துப்பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இத் தெரிவுக் கூட்டத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிருவாகச் செயலாளர் திரு.சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகம் நெறிப்படுத்தி நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொரளையில் பொலிஸார் நேற்றுத் துப்பாக்கிச் சூடு!

பொரளை, வனத்தமுல்லை பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட போதைப் பொருள் சோதனை நடவடிக்கையின் போது பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் சோதனை நடவடிக்கையின் போதே பொலிஸாரினால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் துப்பாக்கிச் சூட்டுக்கு மத்தியில் சந்தேக நபர்கள் வாகனம் ஒன்றில் தப்பிச் சென்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

எனினும் அந்த வாகனம் பேலியகொட பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படும் நிலையில், அவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை கொழும்பு குற்றப்பிரிவு பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

# நாட்டில் மூளைக்காய்ச்சல் பரவல் கொழும்பில் நோயாளி அடையாளம்

மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மற்றுமொரு நோயாளி கொழும்பில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஜா – எல பகுதியை சேர்ந்த 48 வயதான இந்த நோயாளி தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதை கொழும்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் சந்தன கஜநாயக்க உறுதிப்படுத்தினார்.

இவர் இரத்மலானையில் உள்ள நிறுவனமொன்றில் பணிபுரிந்து வருவதாக கொழும்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவருடன் தொடர்புகளை பேணியவர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு தேவையான நோயெதிர்ப்பு மருந்துகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நோய், காலி சிறைச்சாலையில் அண்மையில் பதிவானது.

இதனால் பாதிக்கப்பட்ட இரு கைதிகள் உயிரிழந்ததமையுடன், மேலும் சில கைதிகள் நோய் நிலைமையுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எவ்வாறாயினும், தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளியும் காலி சிறைச்சாலையில் பதிவான நோயாளிகளுக்கும் இடையில் எவ்வித சம்பந்தமும் இல்லையென சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் வைத்தியர் ஜி .விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இது தொடர்பில் கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வைத்திய மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர் தொழிற்சங்கக் கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மன்னார், கிளிநொச்சியில் கால்பதிக்கும் அதானி; மேலும் ஒரு திட்டத்தை கையளிக்க நடவடிக்கை

மன்னாரிலும் கிளிநொச்சி – பூநகரியிலும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டமொன்றையும் மின் விநியோகக் கட்டமைப்பொன்றையும் இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித்த ஹேரத் குறிப்பிட்டார்.

அண்மையில் தயாரிக்கப்பட்டுள்ள அமைச்சரவை பத்திரமொன்றை மேற்கோள்காட்டி அவர் இதனை தெரிவித்துள்ளார்.

442 மில்லியன் டொலர் முதலீட்டில் மன்னாரிலும் பூநகரியிலும் 500 மெகாவாட் காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தி திட்டங்களை அமைப்பதற்காக இலங்கைக்கும் இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை 2022 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன், ஏற்கனவே திட்டத்திற்கான காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதானி நிறுவனத்தின் இந்த திட்டம் தொடர்பாக கடந்த 14 ஆம் திகதி மீண்டும் அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

மின்சார சபை சட்டத்தின் 43 ஆவது சரத்திற்கு அமைய, இத்தகைய முதலீடொன்றை தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதாக இருந்தால் போட்டித்தன்மையுடன் கூடிய விலை மனு கோரல் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

இரண்டு அரசாங்கங்களுக்கு இடையிலான திட்ட யோசனை முன்வைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் விலைமனு கோரலின்றி திட்டத்தை பரிசீலிக்க முடியும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வித விலைமனு கோரலும் இன்றி இந்த திட்டத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்குவதாக 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பகிரங்க விலை மனு கோரலின்றி இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுவதை நியாயப்படுத்துவதற்கான ஒரு விடயமும் அந்த அமைச்சரவை பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

அதானி நிறுவனத்தின் திட்டத்தை இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கிய திட்டமாக கருத வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதானி குழுமம் என்பது இந்திய அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனம் அல்லவென்பதுடன், கௌதம் அதானி என்ற பிரபல வர்த்தகருக்கு சொந்தமான வர்த்தகக் குழுமமாக அது அமைந்துள்ளது.

எவ்வாறாயினும், அதானி திட்டத்தை இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கும் திட்டமாகக் கருதி இரண்டு அரசாங்கங்களுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கலாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பேராசிரியர் சரித்த ஹேரத் வெளிக்கொணர்ந்த, புதிய அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைய இது தொடர்பில் மேலும் பல தகவல்கள் வெளிவந்துள்ளன.

தற்போதைய ஜனாதிபதி அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய, அதானி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட திட்டம் இரண்டு அரசாங்கங்களுக்கு இடையிலான கொடுக்கல் வாங்கலாக கருதப்படுவது நியாயப்படுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொடுக்கல் வாங்கல் அவ்வாறு நியாயப்படுத்தப்படுகின்ற அதேவேளை, 2022 ஆம் ஆண்டு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அப்பால் செயற்றிட்டத்தை விரிவுபடுத்துவதற்கும் அதானி நிறுவனத்திற்கு சந்தர்ப்பமளிக்கப்படவுள்ளது.

மின்சார சபைக்கு மாத்திரம் உரிமையுள்ள மின் விநியோகக் கட்டமைப்பொன்றை அமைப்பதற்கு எவ்வித விலைமனு கோரலும் இன்றி அதானி நிறுவனத்திற்கு அனுமதியளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பேராசிரியர் சரித்த ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.



# Pearl Island Inn

## Hotel & Restaurant

**Dine - in | Take Away | Soft Drinks**

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com



# உண்மையைக் கண்டறிந்து வெளிப்படுத்துவதுடன் பொறுப்புக் கூறலையும் நிலைநாட்டுவது அவசியம்

## காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் ஐ.நாவின் இலங்கைக்கான பிரதிநிதி அறிக்கை

கொழும்பு, ஓக. 31

வலிந்து காணாமலாக்கப்படுதல் குறித்த பாரம்பரியத்திற்கு தீர்வை காண்பது வெறுமனே நீதியுடன் தொடர்புபட்ட விடயம் மாத்திரமல்ல. முன்னேற்றம், பேண்தகு அபிவிருத்தி போன்ற பாதையை இலங்கை உருவாக்குவதற்கும் அது மிகவும் அவசியமானது என ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தர வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ரூ பிரான்ஸ் தெரிவித்துள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை ஒட்டி தாம் விடுத்துள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

உலகம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை குறிக்கும் நிகழ்வுகளில் ஈடுபட்டுள்ள அதே வேளை இந்த ஈவிரக்கமற்ற குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் -தங்கள் அன்புக்குரியவர்கள் - எப்படி உள்ளனர், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியமுடியாத வேதனையை அனுபவித்தவர்கள் குறித்து எங்கள் சிந்தனைகள் திரும்புகின்றன.

இந்தத் தினம் இலங்கையில் ஆழமான பிரதிபலிப்புகளை கொண்டுள்ளது இங்கு பல வருடங்களாக பல குடும்பங்களும் சமூகங்களும் நிச்சயமற்ற தன்மை மற்றும் துயரத்தை எதிர்கொண்டுள்ளதுடன் பதில்கள் அற்ற கேள்விகளின் நிழல்களில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

வலிந்து காணாமலாக்கப்படல் என்பது நாட்டின் வரலாற்றின் துயரபடிந்த கறையை விட்டுச்சென்றுள்ளது. நிச்சயமற்ற நிலையில் வாழும் ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்க்கையை அது தீர்மானிக்கின்றது. அவர்களின் அன்புக்குரியவர்கள் இல்லாத - நிச்சயமாக இல்லை எனக் கருதமுடியாத - நிலை காணப்படுகின்றது.

கடந்த தசாப்தத்தில் சிறிதளவு முன்னேற்றம் கூட ஏற்படாத நிலையில் தங்கள் அன்புக்குரியவர்களின்



நிலையை அவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பதை அறிவதற்கு இலங்கையின் குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளை சந்திக்கின்றனர்.

பதில்களுக்கான அவர்களின் தளர்ச்சியற்ற நீடித்த தேடல்கள் அவர்கள் மேலும் பழிவாங்கப்படும் ஃ அச்சுறுத்தப்படும் - களங்கப்படுத்தப்படும் - சமூகத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்படும் - நிலையை உருவாக்கியுள்ளது.

சமீப வருடங்களில் இலங்கை பலவந்தமாக காணாமல்போதலின் பாரம்பரியத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்காக சில முக்கியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2015 இல் ஐசிபிபீஈடி (வலிந்து காணாமலாக்கப்படுவதிலிருந்து ஒவ்வொருவரையும் பாதுகாக்கும் சர்வதேசப் பட்டயம்) ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. காணாமல்போனோர் அலுவலகத்தை ஏற்படுத்தியது. இவை மைல்கற்களாகும்.

காணாமல்போனவர்கள் குறித்து காணாமல்போனவர்கள் அலுவலகம் பெற்றுக்கொண்டுள்ள, வெளியிட்டுள்ள முறைப்பாடுகள் நீதியை வழங்குவது தொடர்பில் எற்பட்டுள்ள முன்னேற்றங்களிற்கான எங்களின் அளவுகோல்களாக காணப்படுகின்றன.

எனினும் உண்மை கண்டறிதல், நீதி மற்றும் இழப்பீடு போன்றவற்றிற்கான பாதிக்கப்பட்டோரின் உரிமை தொடர்பில் இன்னமும் அதிகளவு செயற்பாடுகள் அவசியமாக உள்ளன.

பாதிக்கப்பட்டவர்களின் நிலை, அவர்கள் எங்கிருக்கின்றார்கள் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கான முயற்சிகளை அரசாங்கம் துரிதப்படுத்தவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். துயரத்தை எதிர்கொண்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கவேண்டும், குற்றவாளிகளை பொறுப்புக்கூறலிற்கு உட்படுத்தவேண்டும் எனவும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

உண்மையை நிலை நாட்டுவது பாதிக்கப்பட்டவர்கள் உயிர்பிழைத்தவர்கள் குடும்பத்தவர்களுக்கு மிகவும் அவசியமான விடயம். இதன் மூலம் மாத்திரமே காயங்களை ஆற்றும் நடவடிக்கை ஆரம்பமாக முடியும். நல்லிணக்க செயற்பாடுகள் ஆரம்பமாக முடியும்.

ஐக்கியநாடுகள் வலிந்து காணாமலாக்கப்படுதலினால் பாதிக்கப்பட்டவர்கள் குடும்பத்தவர்களுக்கு தொடர்ந்தும் தனது ஆதரவை வெளியிடுவதுடன் உண்மை, நீதி, நல்லிணக்கத்திற்காக வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோரின் உறவுகள் மேற்கொண்டுள்ள போராட்டங்களிற்கும் தனது ஆதரவை வெளியிடுகின்றது.

நாங்கள் இன்றைய நாளை குறிக்கும் அதேவேளை வலிந்து காணாமலாக்கப்படுதல் என்பது கடந்த காலத்தின் ஒரு விடயமாக மாறுவதை உறுதி செய்வதற்கான எங்கள் அர்ப்பணிப்பை புதுப்பித்துக்கொள்வோம்.

நாங்கள் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளிற்காக குரல்கொடுப்போம். நீதியின் கொள்கைகளை நிலைநிறுத்துவோம். எந்தக் குடும்பமும் நிச்சயமற்ற நிலையில் வாழத எதிர்காலத்தை உருவாக்குவோம்.

வலிந்துகாணாமலாக்கப்படுதல்குறித்த பாரம்பரியத்திற்கு தீர்வை காண்பது வெறுமனே நீதியுடன் தொடர்புபட்ட விடயம் மாத்திரமில்லை. முன்னேற்றம், பேண்தகு அபிவிருத்தி போன்ற பாதையை இலங்கை உருவாக்குவதற்கும் மிகவும் அவசியமானது என்றார்.

# 3 கோடி ரூபா மதிப்பான ஐஸுடன் ஒருவர் கைது!

மன்னார் மதவாச்சி பிரதான வீதி உயிலங்குளம் பகுதியில் வைத்து சுமார் 3 கிலோ 394 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒரு வரை செவ்வாய்க் கிழமை மாலை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் மன்னார் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் எனத் தெரிய வந்துள்ளது.

மன்னாரில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸில் இந்தப் போதைப்பொருள் கடத்திச் செல்லப்பட்ட நிலையில், விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் உயிலங்குளம் பகுதியில் வைத்துஅந்த பஸ் விசேட அதிரடிப் படையினரால் நிறுத்தப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது இந்த நபர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் போதைப்பொருளுடன் உயிலங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மீட்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் 3 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியானது எனத் தெரிய வந்துள்ளது.

# குருந்தூர்மலைக்கு வெளியாட்களை அழைத்து வரக் கூடாது என்று பணிப்பு

## மகாநாயக்கர்களிடம் ஜனாதிபதி நேரில் தகவல்
## மாகாண மதத் தலைவர்கள் குழுவும் நியமனமாம்



**கொழும்பு, ஓக. 31**

**பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கும் வகையிலேயே நான் அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றேன். பௌத்த மத தலங்கள் அனைத்தையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். வடக்கில் குருந்தி விகாரையின் பிரச்சினையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். - என ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க குறிப்பிட்டார்.**

அதேசமயம் அந்தப் பகுதிக்கு வெளிப் பிரதேசங்களிலிருந்து எவரையும் அழைத்துவர வேண்டாம் என அப்பகுதி சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்கர் ஆணமடுவே தம்மதிஸ்ஸி தேரரை சந்தித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

புத்த தர்மம் பற்றியும் பேசப்படுகிறது. தேரவாத பௌத்த நாடுகள் எவையும் முன்னேற்றம் பெறவில்லை. தாய்லாந்துடன் ஒப்பிடும்போது இலங்கை பின்னணியிலேயே உள்ளது. இலங்கையும் தாய்லாந்தும் முன்னேற்றம் காண வேண்டும். தாய்லாந்துடனான புதிய வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடுவது தொடர்பில் பேச்சுதைகளை ஆரம்பித்துள்ளோம்.

அதனால் தேரவாத நாடுகள் இரண்டும் முதன்முறையாக ஒன்றுபடும். அடுத்த வருடத்தின் பெப்ரவரி அல்லது மார்ச் மாதமளவில் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட தாய்லாந்து அரசாங்கத்திடம் கோரியுள்ளேன். அதனை வரலாற்று சிறப்பு மிக்க கண்டி நகரத்தில் கைச்சாத்திடுவதற்கான இயலுமை தொடர்பில் மகாநாயக்க தேரர்களிடத்தில் வினவினேன். அது சிறந்ததொரு ஆரம்பமாகும்.

விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். அதனால் ஹெக்டயாருக்கு 7 – 8 தொன்கள் வரையிலான உற்பத்தித் திறன் கிட்டும். அவுஸ்திரேலியா ஒரு ஹெக்டெயாரில் 10 தொன் நெல் உற்பத்தியை செய்கிறது. எமது நாட்டின் ஹம்பாந்தோட்டை போன்ற பகுதிகளில் 11 மெற்றிக் தொன் நெல் விளைச்சல் பெறப்படுகின்றன.

அதேபோல் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கும் வகையிலேயே நான் அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றேன். பௌத்த மத தலங்கள் அனைத்தையும் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்புகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். வடக்கில் குருந்தி விகாரையின் பிரச்சினையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வெளிப்பிரதேசங்களிலிருந்து எவரையும் அழைத்துவர வேண்டாம் என, அப்பகுதி சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் அப்பகுதி மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ள நிலையில் வெளியிலிருந்து வந்த குழுவினரே முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளனர். அது தொடர்பில் வவுனியா மகாநாயக்க தேரரையும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அதனால் நாம் வெளியிலிருந்து அந்தப் பிரதேசத்திற்கு செல்வதற்கு எவரையும் அனுமதிப்பதில்லை. அது தொடர்பிலான விடயங்களை கண்டறியுமாறு தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் சட்டத்திற்கு அமைய செயற்படுமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் மகா விகாரையில் அகழ்வுகளை மேற்கொள்ளவும் எதிர்பார்த்துள்ளோம். வடக்கில் இடம்பெறும் அகழ்வுகளின் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டு அந்தப் பணிகளை முன்னெடுப்போம்.

முன்னைய அரசாங்கம் இராணுவத்தின் உதவியுடன் அகழ்வுகளை துரிப்படுத்தியதாக கூறினீர்கள். இருப்பினும் அந்த ஆய்வு முடிவுகள் இன்னும் கிடைக்கவில்லை. தொல்பொருள் திணைக்களம் வழங்கும் தீர்மானத்திற்கு அமைய செயற்பாடுகளை முன்னெடுக்க நாம் எதிர்பார்த்துள்ளோம். அந்தப் பகுதிகளை பாதுகாக்கவும் நாம் எதிர்பார்த்துள்ளோம்.

பௌத்த தலங்களை பாதுகாக்கும் அதேநேரம் முதலில் தொல்பொருளியல் ஆய்வுகளை மேற்கொண்டு அப்பகுதிகளில் மற்றைய மதம் சார்ந்த பிரச்சினைகள் இருக்குமாயின் அதுபற்றி ஆராயவும் தயாராகவுள்ளோம்.

இருப்பினும் வெளியிலிருந்து வருவோர் அப்பகுதிகளுக்குள் பிரச்சினைகளை தோற்றுவிக்க நாம் இடமளியோம். அதற்காக மாகாண மதத் தலைவர்கள் குழுவொன்றை நியமித்து பிரச்சினைகளை நிவர்த்திக்கவும் எதிர்பார்த்துள்ளோம். அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட்டால் பிரச்சினைகள் ஏற்படாது.

அதேபோல் அரசமைப்பின் 13 ஆவது திருத்திற்கமைவான சட்டமூலமொன்று 20 வருடங்களின் முன்னர் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன் உள்ளடக்கங்களை நாம் மாற்றியமைத்தோம். ஒவ்வொரு மாகாணங்களிலிருந்தும் ஒருவர் என்ற அடிப்படையில், 09 பிரதிநிதிகள் மற்றும் மத்திய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பல்வேறு பதவிகளை வகிக்கும் 12 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல், காணி பயன்பாடு தொடர்பிலான தேசிய கொள்கை ஒன்றை தயாரிக்க வேண்டும். காணி பயன்பாடு தொடர்பிலான இணக்கபாட்டினையும் எட்ட வேண்டும். காணி தொடர்பிலான மறுசீரமைப்புக்கள் எவையும் மேற்கொள்ளப்படாது என்பதோடு, காணிச் சட்டம் தொடர்பில் தேசிய அளவில் மாற்றங்கள் செய்யப்படும். அதனை செயற்படுத்தும் பணிகள் மாகாண சபைகளிடத்தில் ஒப்படைக்கப்படும். தேசிய காணி ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய அந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும்.” என்றும் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவும் இச்சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டார்.

# கட்டையால் தாக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் மரணம்

## லிந்துலைப் பகுதியில் சம்பவம்

இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு கைகலப்பாகி ஒருவர் மற்றையவரைக் கட்டையால் தாக்கினார். அதில் காயமடைந்தவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இச் சம்பவம் லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெயார்வெல் குரூப் வலகா தோட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது .

நேற்று முன்தினம் மாலை இந்தத் தோட்டத்தில் உள்ள (மேட்டு லயம்) இரு இளைஞர்களுக்கிடையே இடம்பெற்ற வாக்குவாதம் தாக்குதலில் முடிவடைந்த நிலையில் கட்டையால் தாக்குதலுக்குள்ளான மூன்று பிள்ளைகளின் தந்தையான 40 வயதுடைய வீரசாமி பெஞ்சமின், நுவரெலியா வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

கட்டையால் தலைப்பகுதியில் தாக்கப்பட்டமையே இந்த இளைஞன் உயிரிழந்தமைக்கான காரணம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. உயிரிழந்த இளைஞனின் மனைவி தற்போது வெளிநாட்டில் இருக்கிறார் எனவும் கூறப்பட்டது. மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# யாழ்.மாவட்டக் காணிப் பதிவகம் ஊழியரின்றி முடங்கும் நிலைமை!

ஊழியர் பற்றாக்குறை காரணமாக யாழ்.மாவட்ட காணிப் பதிவகம் முடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 24ஆம் திகதி முதல் காணி பதிவகத்தில் ஒருநாள் சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளமையால், பலரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அது தொடர்பில் தெரியவருவதாவது:-

யாழ்.மாவட்ட காணி பதிவகத்தில் இரு உத்தியோகஸ்தர்கள் கடமையாற்றி வந்த நிலையில் ஒருவர் சுகவீனம் காரணமாக விடுப்பில் உள்ளார். அதனால் ஒருவர் மாத்திரமே கடமைக்கு சமுகமளிப்பதனால் , கடந்த 24ஆம் திகதி முதல் மறுஅறிவித்தல் வரையில் ஒருநாள் சேவைகள் இடை நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கடமையில் இருக்கும் ஓர் உத்தியோகஸ்தருக்கு , வேலை பளு அதிகரித்துள்ள நிலையில் , விடுப்பில் உள்ளவருக்கு மாற்றீடாக ஓர் உத்தியோகஸ்தரை நியமிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இந்த அலுவலகத்தில் வெளிமாகாணங்களை சேர்ந்த 06 உத்தியோகஸ்தர்கள் கடமையில் இருந்த நிலையில் ,அரசியல் செல்வாக்குகளை பயன்படுத்தி அவர்கள் தமது சொந்த மாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். அந்த வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்ப படாமல் இருந்தமையால் இரு உத்தியோகஸ்தர்களே கடமையாற்றி வந்தனர்.

இந்நிலையில் ஓர் உத்தியோகஸ்தர் விடுமுறையில் உள்ளமையால் ஒருவரே பணியில் உள்ளார்.

தற்போதைய சூழலில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பலரும் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு முயன்று வருகின்றனர். அதற்காக காணி உறுதி மாற்றங்களுக்கு அதிகளவானோர் விண்ணப்பிக்கின்றனர். அவர்கள் ஒருநாள் சேவையில் அதனை பெறவே விரும்புகின்றனர். சாதாரண சேவை மூலம் பெறுவதாயின் சுமார் ஒரு மாத கால பகுதிக்கு மேல் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

அதேபோன்று தற்போது புலம்பெயர் நாடுகளில் இருந்தும் பெரும்பாலானோர் விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது காணிகளை தாம் நிற்கும் கால பகுதியில் மாற்றம் செய்வதற்கும் ஒரு நாள் சேவையையே விரும்புகின்றனர்.

அந்நிலையில் சுமார் ஒருவார கால பகுதியாக ஒருநாள் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளமையால் பலரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

உடனடியாக யாழ்.மாவட்ட காணிப் பதிவு திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலரும் கோரியுள்ளனர்.

# முதல் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்பாட்டை சினோபெக் ஆரம்பித்தது

நாட்டின் எரிபொருள் விநியோக சந்தையில் புதிதாக இணைந்த சினோபெக் நிறுவனம் தனது முதல் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்பாடுகளை நேற்று ஆரம்பித்தது.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கி வந்த மத்தேகொட எரிபொருள் நிரப்பு நிலையம் நேற்று முதல் சினோபெக் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

சீனாவின் சினோபெக் நிறுவனம் கடந்த மே மாதம் 22 ஆம் திகதி நாட்டின் எரிபொருள் விநியோக சந்தையில் பிரவேசிப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

இந்த ஒப்பந்தத்தின் படி, 20 ஆண்டுகளுக்கு எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிக்க சினோபெக் நிறுவனத்திற்கு உரிமை உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆமைகளின் சாவுக்குக் காரணம் கடலில் நடத்தப்பட்ட வெடிப்புகள்!



கடந்த சில நாள்களாக மேற்கு கரையோரத்தில் கரையொதுங்கிய ஆமைகளின் உயிரிழப்புக்குக் கடலில் ஏற்பட்ட வெடிப்பே காரணம் என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.


இந்த ஆமைகளின் சடலங்களை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய போது இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறையில் வெடிமருந்துகளை பயன்படுத்தியதால் கடலில் வெடிப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என வனவிலங்குத் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த 22ஆம் தகதி முதல் மேற்கு கடற்கரையில் இறந்த ஆமைகளின் எண்ணிக்கை 25 ஆக உள்ளது.

மேலும் மூன்று ஆமைகளின் வெளிப்புற ஓடு கடுமையாக சேதமடைந்துள்ளன. அவற்றுக்குச் சிகிச்சை அளிக்கும் பணி ஏற்கனவே தொடங்கியுள்ளது.

# சீனாவின் புதிய வரைபடத்தால் சர்ச்சை: வழக்கமான நடைமுறை என அறிவிப்பு



சீனா வெளியிட்டுள்ள புதிய வரைபடத்தினால் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்தியாவின் அருணாச்சல பிரதேசம், அக்ஷய் சின் பகுதிகளை இணைத்து சீனா வெளியிட்டுள்ள புதிய வரைபடத்தினால் சர்ச்சை எழுந்துள்ளது.


இந்த நிலையில், குறித்த வரைபடத்தை நியாயப்படுத்தியுள்ள சீனா, இது வழக்கமான நடைமுறைதான் எனவும் இந்தியா மிகையாக அர்த்தப்படுத்த வேண்டாம் என்று தெரிவித்துள்ளது.

புதிய வரைபடம் தொடர்பான இந்தியாவின் எதிர்ப்பு குறித்த கேள்விக்கு பதில் அளித்துள்ள சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் வான் வென்பின், இயற்கை வளத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள வரைபடம் ஒரு வழக்கமான நடைமுறைதான்.

சட்டத்தின்படி இறையாண்மையை நடைமுறைப்படுத்துவது சீனாவில் வழக்கான நடவடிக்கையில் ஒன்று. சம்பந்தப்பட்ட இரு தரப்பும் குறிகோள்களுக்காக அமைதியாக இருக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இதுகுறித்து மிகையாக அர்த்தப்படுத்தி கருத்துக் கூற வேண்டாம் என்று சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

## விக்ரம் லேண்டரை படம் பிடித்து அனுப்பிய பிரக்யான் ரோவர்!




பூமியில் இருந்து நிலவிற்கு தன்னை சுமந்து சென்ற விக்ரம் லேண்டரை படம் பிடித்து இஸ்ரோ விண்வெளி ஆய்வு மையத்திற்கு பிரக்யான் ரோவர் அனுப்பி வைத்துள்ளது.

அந்த புகைப்படத்தை சமூக வலைத் தள பக்கத்தில் இஸ்ரோ பகிர்ந்துள்ளது.

அந்த பதிவில், விக்ரம் லேண்டரை நேற்று காலை பிரக்யான் ரோவர் படம் பிடித்துள்ளது. ரோவரில் அமைந்துள்ள நேவிகேஷன் கெமராவின் மூலம் இந்த மிக அற்புதமான புகைப்படம் எடுக் கப்பட்டுள்ளது.

சந்திரயான் - 3 விண்கலத்தில் பொருத்தப்பட்டிருந்த நேவிகேஷன் கேமராவானது எலக்ட்ரோ-ஆப்டிக்ஸ் சிஸ்டம்ஸ் ஆய்வுக் கூடத்தில் தயாரிக் கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலவின் மேற்பரப்பில் கந்தகம் இருப்பதை சந்திரயான்-3 விண்கலத்தின் பிரக்யான் ரோவர் கண்டறிந்துள்ளது எனவும் ஹைட்ரஜனுக்கான தேடல் நடைபெற்று வருகிறது என்றும் இஸ்ரோ நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.

நிலவின் தென் துருவத்தில் 'பிரக்யான்' ரோவர் நிலவின் மேற்பரப்பில் தனது ஆய்வுகளை தொடர்ந்தும் நடத்தி வருகிறது.

கந்தகம் மட்டுமின்றி எதிர்பார்த் தப்படியே, அலுமினியம், கால் சியம், இரும்பு, க்ரோமியம், டைடேனியம், மங்கனீஸ், சிலிக்கான் மற்றும் ஒக்சிஜன் போன்றவையும் கண்டறியப்பட்டுள்ளன.

ஆய்வுத் திட்டத்தின் முக்கிய இலக்கான ஹைட்ரஜன் தேடல் நடந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## பணக்காரர்களுக்காக மோடி அரசு செயல்படுகிறது !

பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு பெரும் பணக்காரர் களுக்காகவே செயல்படுகிறது என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 2 ஆயிரம் ரூபா வழங்கும் கர்நாடக அரசின் கிரஹ லக்ஷ்மி திட்டம் மைசூருவில் நேற்று தொடங்கப்பட்டது. இந்த விழாவில், காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டு திட்டத்தை தொடங்கி வைத்தனர்.

பின்னர் விழாவில் பேசிய ராகுல் காந்தி, நாங்கள் அளித்த வாக்குறுதியின்படி தற்போது கிரஹ லக்ஷ்மி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. கனிணியில் ஒரே ஒரு கிளிக் செய்ததன் மூலம் கோடிக்கணக்கான பெண்களின் வங்கிக் கணக்குகளில் பணம் சென்று சேர்ந்துள்ளது.

நாங்கள் கொடுத்த இந்த 5 வாக்குறுதிகளில் 4 வாக்குறுதிகள் பெண்களுக்கானவை. ஏழைகளின் சிரமங்களை அறிந்து காங்கிரஸ் அரசு கர்நாடகாவில் செயல்பட்டு வருகிறது. ஆனால், மத்தியில் உள்ள அரசு பெரும் பணக்காரர்களுக்காகவே பணியாற்றுகிறது. ஏழைகளுக்காகவும், பலவீனமானவர்களுக்காகவும் அரசு செயல்பட வேண்டும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், நரேந்திர மோடி தலைமையிலான அரசு அப்படி அல்ல என்று தெரிவித்துள்ளார்.

# அவுஸ்ரேலியாவில் ஒக்டோபர் 14 ஆம் திகதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாக்கெடுப்பு!




அவுஸ்ரேலியாவில் பழங்குடியினருக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வழங்குவது தொடர்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாக்கெடுப்பு எதிர்வரும் ஒக்டோபர் 14 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

இந்த வாக்கெடுப்பு வெற்றியடையுமிடத்து பூர்வீகக் குடிமக்களும் டோரஸ் நீரிணை தீவு மக்களும் அவுஸ்ரேலிய அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்படுவர்.

அத்துடன் சட்டவாக்கத்தில் ஆலோசனைகளை வழங்குவதற்காக அவர்களுக்கென நிலையான பிரதிநிதித்துவமொன்று உருவாக்கப்படுமென்பது குறிப்பிடத்தக்கது. அவுஸ்ரேலியாவில் கடும் விவாதத்திற் குரிய தலைப்பாக இந்த முன்மொழிவு காணப்படுகின்றது.

பழங்குடியினருக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வழங்குவது தொடர்பில், சுமார் 50 ஆண்டுகளாக வெற்றிகரமான வாக்கெடுப்பு அவுஸ்திரேலியாவில் நடத்தப்படவில்லை.

இந்த வாக்கெடுப்பு வெற்றியடைய வேண்டுமாயின் பெரும்பான்மை அவுஸ்ரேலியர்கள் 'ஆம்' என வாக்களிக்க வேண்டுமென்பதுடன், மொத்தமுள்ள 6 மாநிலங்களில் 4 மாநிலங்களின் பெரும்பான்மை ஆதரவு தேவையென்பது குறிப்பிடத்தக்கது.

## மற்றுமொரு வழக்கில் இம்ரான்கானின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிப்பு!



அரச இரகசியங்களை பகிரங்கபடுத்தியமை தொடர்பான வழக்கில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் விளக்கமறியலை இரண்டு வாரங்களுக்கு நீடித்து அந்த நாட்டு விசேட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமது பதவிக் காலத்தில் வெளிநாட்டு தலைவர்கள் வழங்கிய விலை உயர்ந்த பரிசுப் பொருட்களை சட்டவிரோதமாக அதிக விலைக்கு விற்றதாக இம்ரான் கான் முன்னதாக கைதுசெய்யப்பட்டார்.

இந்த வழக்கில் அவருக்கு 3 வருட சிறைத் தண்டனையும், ஒரு லட்சம் அபராதமும் விதித்து மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து அவர், பஞ்சாப் மாகாணத்தில் உள்ள அட்டாக் சிறையில் வைக்கப்பட்டார்.

இந்தநிலையில், மாவட்ட நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதித்து இஸ்லாம்பாத் மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

அத்துடன், அவரை உடனடியாக விடுவிக்குமாறும் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு அந்த நீதிமன்றம் உத்தரவொன்றையும் பிறப்பித்தது.

எனினும், அவர் மீது மற்றுமொரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால் அவர் சிறையிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதுவர் அனுப்பிய இரகசிய தகவலின் உள்ளடக்கங்களை பகிரங்கப்படுத்தி, அதை அரசியல் லாபத்திற்காக பயன்படுத்தினார் என்று இம்ரான் கான் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பான விசாரணைக்காகநேற்று அவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

குறித்த வழக்கில் இம்ரான்கானின் விளக்கமறியலை எதிர்வரும் செப்டம்பர் 13 ஆம் திகதி வரை நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## வாக்னர் தலைவர் பலி: விசாரணை இடம்பெறாது!

சர்வதேச விதிகளின் கீழ் வாக்னர் ஆயுதப் படையின் தலைவர் யெவ்ஜெனி ப்ரிகோஜின் கொல்லப்பட்ட விமான விபத்து குறித்த விசாரணைகளை ஆரம்பிக்கப் போவதில்லை என ரஷ்யா பிரேஷிலின் விமான போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.

பிரேஷில் விமான போக்குவரத்து ஆணைக்குழு ரொய்ட்டர்ஸ் செய்தி சேவைக்கு இந்த விடயத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

பிரேஷில் தயாரிப்பான ஜெட் ரக விமானம் ஒன்று அண்மையில் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த வாக்னர் ஆயுதப் படையின் தலைவர் யெவ்ஜெனி ப்ரிகோஜின் உள்ளிட்ட 10 பேர் கொல்லப்பட்டனர்.

அதேநேரம், குறித்த விமான விபத்துக்கு ரஷ்யாவே காரணம் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ரஷ்யா மறுத்துள்ளது.

## புளோரிடாவில் அவசரகால பிரகடனத்திற்கு ஜோ பைடன் அனுமதி!

அமெரிக்காவின் புளோரிடாவில் நிலவும் மழையுடனான வானிலை காரணமாக அங்கு நிலவும் அதிக காற்று, சூறாவளியாக மாற்றமடையக்கூடும் என அமெரிக்க வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

குறித்த சூறாவளி தரை மட்டத்திலிருந்து 4.5 மீற்றர்வரை உயரத்தில் சில கடலோரப் பகுதிகளைத் தாக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், புளோரிடாவில் அவசரகால பிரகடனத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அனுமதி வழங்கியுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# கடற்கரை சுத்தப்படுத்தலும் மரம் நடுகையும்



(நிதர்ஷன்)

சாவகச்சேரி பிரதேச செயலகமும், யாழ். கரிதாஸ் – கியூடெக் நிறுவனமும் இணைந்து முன்னெடுத்த கடற்கரை சுத்தப்படுத்தலும் மரம் நடுகையும் சாவகச்சேரி கோவிலாக்கண்டி பிரதேசத்தில் நேற்று (29) இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கரிதாஸ் – கியூடெக் நிறுவன இயக்குனர் அருட் தந்தை இயூஜின் பிரான்சிஸ், சாவகச்சேரி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சர்வேஸ்வரன், சாவகச்சேரி பங்குத் தந்தை ஞானரூபன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இந்தக் கடற்கரை சுத்தப்படுத்தும் பணியில் கோவிலாகண்டி மீனவர் சங்கம், கோவிலாக்காண்டி மாதர் சங்கம் உள்ளிட்ட பொது அமைப்புகள் கலந்து கொண்டன. பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு மரக் கன்றுகளை நட்டு வைத்தனர்.









# சர்வதேச தடகள சம்பியன் ஷிப் கல்முனை ஆசிரியருக்கு இரு பதக்கங்கள்

(எஸ்.அஷ்ரப்கான்)

முதலாவது சர்வதேச மஸ்ஜர்ஸ் தடகள சம்பியன்ஷிப்- 2023 போட்டியின் சர்வதேச சிரேஷ்ட மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி கல்முனை அல் மிஸ்பஹ் மகா வித்தியாலய சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் றிஸ்மி மஜீத் (400மீற்றர்,100மீற்றர்) தடை தாண்டுதல் போட்டியில் பங்கேற்று வெள்ளி, வெங்கலப் பதக்கங்களைத் தனதாக்கிக் கொண்டார்.

கடந்த 19, 20 ஆம் திகதிகளில் தியகம சர்வதேச மைதனத்தில் நடைபெற்ற இப்போட்டியில் வெற்றிகளை சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் றிஸ்மி மஜீத் பெற்றுள்ளார்.

இவருக்கான பாராட்டு நிகழ்வு நேற்று முன்தினம் (28) கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹறுதுல் நஜீம் தலைமையில் இடம் பெற்றது.

இங்கு பாராட்டு சான்றிதழை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹறுதுல் நஜீம் உள்ளிட்ட குழுவினர் வழங்கி கௌரவித்தனர்.

இந்நிகழ்வில், பிரதிக் கல்வி பணிப்பாளர் ஏ.எம். ஜபீர், உதவிக் கல்வி பணிப்பாளர் (உடற்கல்வி ) யு. எஸ். எம். சஜித், கோட்டக்கல்வி அதிகாரி (கல்முனை தமிழ்) யு.எல்.றியால், கோட்டக்கல்வி அதிகாரி (சாய்ந்தமருது) என்.எம்.ஏ.மலீக் ஆகியோருடன் கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# வணக்கஸ்தலங்களுக்கு சூரிய சக்தி மூலம் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுங்கள்

## அரசிடம் கோரிக்கை விடுப்பு

(அ.அஸ்வர்)

அதிகரித்துள்ள மின்சாரக் கட்டணச் சுமையில் இருந்து மீளும் பொருட்டு வணக்கஸ்தலங்களுக்கு சூரிய சக்தி மூலமான மின்சாரத் திட்டத்தை உடனடியாக அமுல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வணக்கஸ்தலங்களின் நிர்வாகிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நாட்டிலுள்ள பெரும்பாலான வணக்கஸ்தலங்கள் அவ்வப் பிரதேச பொதுமக்கள் மற்றும் நலன்விரும்பிகளின் நிதிப் பங்களிப்பு மூலமாகவே பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இதில் பெரும் பகுதி மின்சாரக் கட்டணத்துக்கே செலவிடப்படுகிறது. அது தற்போது பன்மடங்காக அதிகரித்துள்ளது. இதனால் தாம் பல்வேறு பொருளாதார கஸ்டங்களை எதிர் கொள்வதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாட்டில் மின்பாவனையை மட்டுப் படுத்தும் வகையில் சூரிய சக்தி மூலமான நவீன மின்சாரப் பாவனைத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுவரும் இச் சந்தர்ப்பத்தில் அரசின் நிதியுதவியுடன் வணக்கஸ்தலங்களுக்கென முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாகச் சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளும், பிரதேச அரசியல்வாதிகளும் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்து நாட்டிலுள்ள அனைத்து வணக்கஸ்தலங்களும் பயன்பெறும் வகையில் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்படுகிறது.




# போதை ஒழிப்புப் பேரணியும் வீதி நாடகமும்

(நூருல் ஹுதா உமர்)



இனங்களுக்கிடையில் நல்லுறவை கட்டியெழுப்பி இளம் சந்ததியை ஆற்றலும், நல்லொழுக்கமும் மிக்க சந்ததியாக உருவாக்கும் நோக்கில் போதை ஒழிப்புப் பேரணியும் வீதி நாடகமும் நடத்தப்பட்டுள்ளன.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மற்றும் அதன் அனுசரணை வலையமைப்பான இனங்களுக்கிடையிலான சமாதான வழிகாட்டல் குழு ஆகியவற்றின் ஏற்பாட்டில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் யூ.எல்.ஹபீலாவின் ஒருங்கமைப்பின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் எப்.எம்.எஸ். அன்ஸார் மௌலானா தலைமையில் நேற்று கல்முனையில் இடம்பெற்றன.

கல்முனை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.எப்.எம். பழீல், கல்முனை பிரதேச செயலக முன்றலில் வைத்து போதையொழிப்பு பேரணியை தொடக்கி வைத்தார்.

கல்முனை பிரதான வீதியூடாக சென்ற பேரணி பொதுச் சந்தையை ஊடறுத்து கல்முனை இஸ்லாமாபாத் வீட்டுத் திட்டத்தைச் சென்றடைந்தது. அதனை தொடர்ந்து அக்கரைப்பற்று அருவி கலை மன்ற கலைஞர்களால் போதை ஒழிப்பு, சிறுவர் துஸ்பிரயோகம், பெண்கள் கொடுமை போன்றன உள்ளடக்கிய கருவை கொண்ட வீதி நாடகம் அரங்கேற்றப்பட்டது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், இனங்களுக்கிடையிலான சமாதான வழிகாட்டல் குழுவின் ஊடக செயலாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை இணைப்பாளர் ஏ.எல்.எம். அஸீஸ், இனங்களுக்கிடையிலான சமாதான வழிகாட்டல் குழுவின் செயலாளர் அதிபர் எம்.எச்.எஸ்.ஆர். மஜீதிய்யா, மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான பீ. ஜெனிட்டா, ஏ.ஆர். ரிஸ்வானுல் ஜன்னா, சமூக அமைப்பு பெண் தலைவிகள், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் உத்தியோகத்தர் ஆர். அனுஸ்கா, ஆசிரியர் எம்.எம். விஜிலி மூஸா, முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் உத்தியோகத்தர்கள், திருமதி பாத்திமா பர்வின், பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# மன்னாரில் பயறு அமோக விளைச்சல்

(மன்னார்)

விவசாய செய்கை மூலம் சிறந்த ஒரு பொருளாதாரக் கொள்கை ஒன்றை ஏற்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் விவசாய அமைச்சாலும், மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியத்தின் மூலமும் மற்றும் காம காரர்கள் சொந்த பணத்திலும் விவசாயிகளுக்கு பயறு நடுகைக்கான பொருள்கள் வழங்கப்பட்டன.

இதில் மன்னார் மாவட்டத்தில் சிறுபோக செய்கையில் சுமார் 1600 ஹெக்டயர் நிலப்பரப்பில் கட்டுக்கரை குளத்தின் கீழ் உள்ள நெல் வாயில்களில் மாற்றுப் பயிராக பயறு பயிரிடப்பட்டிருந்தது.

இந்தப் பயிர் செய்கையின் அறுவடையை கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

அறுவடை மூலம் மன்னார் மாவட்டத்தில் 900 மெட்ரிக் டன் பயறு விற்பனைக்காக உள்ள நிலையில் ஒரு கிலோ கிராம் பயிறு 825 ரூபாய் தொடக்கம் 850 வரை விற்கப்படவுள்ளது.

இந்தப் பயிர் செய்கை மூலம் பெண்கள் நாளாந்தம் சுமார் 5000 ரூபாய் வருமானத்தைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் சகிலா பானு தெரிவித்தார்.

# பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்தும் செயலமர்வு



(றியாஸ் ஆதம்)

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்துதல் எனும் தொனிப்பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பால் நிலை சமத்துவம் தொடர்பான செயலமர்வு நேற்று (29) இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டலின் கீழ் பிராந்திய உளநலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே. நௌபலினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த செயலமர்வில் தாதிய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.அப்துல் வாஜித், பிராந்திய உளநலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.நௌபல், உளமருத்துவ சமூக உத்தியோகத்தர் எம்.ஆர்.எம்.ஹமீம் ஆகியோர் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு விரிவுரைகளை நடத்தியதுடன் பங்குபற்றுனர்களுடன் குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடினர்.

வேலைத்தளங்களில் பால்நிலை அசமத்துவங்களை எதிர்கொள்ளுதல் ஓர் உளவியல் கண்ணோட்டம் என்ற தலைப்பிலும், பெண்களுக்கான சட்ட ரீதியான பாதுகாப்பு பால் ரீதியாக பாரபட்சம் காட்டப்படுதலில் இருந்து விடுகை பெறுதல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் இந்நிகழ்வின் போது கலந்துரையாடப்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் - 31.08.2023




இன்று சிறப்பான நாள். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும் நாள். புதிய தொடர்புகள் கிடைக்கும். நட்பு வட்டராம் விரிவடையும்.

பணியில் முன்னேற்றம் காணப்படும். பணியில் கிடைக்கும் புதிய வாய்ப்புகள் காரணமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் துணையிடம் உண்மையான அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் இந்தப் போக்கு உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்யும்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

நீங்கள் இன்று மகிழ்ச்சியான மன நிலையில் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மனதில் நம்பிக்கை நிறைந்து காணப்படும். இதன் மூலம் உங்கள் கனவுகள் நிறைவேறும். இலக்குகளை அமைத்துக் கொண்டு செயலாற்றுவது சிறந்தது. உங்கள் நண்பர்கள் மற்றும் உடனிருப்பவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

பணியிடம் உங்கள் திறமையை நிரூபிக்க சாதகமான தாக இருக்கும். நீங்கள் உங்கள் திறமைக்கான பாராட்டைப் பெறுவீர்கள்.

இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும். நீங்கள் இருவரும் ஒட்டுறவையும் நல்ல பிணைப்பையும் உருவாக்கிக் கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். உங்கள் சம்பாத்தியம் உயர வாய்ப்பு உள்ளது. பூர்வீக சொத்து வகையில் பணம் வரும் வாய்ப்பு உள்ளது.




இன்று சாதகமான பலன்கள் காண உகந்த நாள் அல்ல. உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போரட வேண்டும். அதிர்ஷ்ட வாய்ப்பும் குறைவாக உள்ளது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

அதிக பணிகள் உங்களுக்கு கவலை அளிக்கும். ஓய்விற்கான நேரம் கிடைக்கும் வாய்ப்பு குறைவாக இருக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் நன்மை பெறலாம்.

குழப்பமான மனநிலை காரணமாக உங்கள் துணை யுடன் ஆரோக்கியமான உறவு காணப்படாது. நல் லுறவை ஏற்படுத்திக் கொள்ள சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும்.




இன்று அனுகூலமான பலன்கள் கிடைக்காது. இன்றைய நாள் சீராகச் செல்ல அனுசரணையான போக்கு தேவை. சில சமயங்களில் உங்களிடம் அவநம்பிக்கை உணர்வு தோன்றும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும். உங்கள் சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக பழக வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்படுத்த நம்பிக்கை தரும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். உங்கள் இருவரிடையே மோதல்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

கூடுதல் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று நிதிநிலையை சமாளிப்பது கடினமாக இருக்கும்.

கண் எரிச்சல் உங்கள் பாதிக்கும். எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் தொடர் முயற்சி மூலம் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். உறுதியான போக்கு மூலம் நீங்கள் தடைகளை வெல்வீர்கள்.

நீங்கள் உங்கள் அனைத்துப் பணி களையும் சிரத்தையுடன் ஆற்றுவீர்கள். இதனால் பணி களை விரைவாக முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிக ளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் உண்மையாக நடந்து கொள் வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல பிணைப்பு ஏற்படும்.

இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும். உங்கள் வங்கியிருப்பை சிறப்பாக பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் ஆற்றலுடனும் துடிப்புடனும் காணப்படுவீர்கள்.




இன்று சாதகமான சூழ்நிலை காணப்படும். அது உங்களுக்கு உற்சா கத்தை அளிக்கும். இன்று எடுக்கும் முடிவுகள் நன்மை அளிக்கும். அதிஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும்.

வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற் கான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிக ளின் பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவு கொண்டிருப் பீர்கள். இதனால் இருவரிடையே பிணைப்பு வலுப்படும்.

நிதிநிலைமை சிறந்த பலனளிக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கு நீங்கள் ஊக்கத் தொகை பெறுவீர்கள்.

இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள். ஆரோக்கியத் தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று சற்று மந்தமான நாளாக இருக்கும். ஆன்மீக நிகழ்ச்சி அல்லது சொற்பொழிவுகளில் பங்கு கொள்வது உங்களுக்கு ஆறுதல் அளிக்கும். பிரார்த் தனை சிறந்த பலனளிக்கும்.

பணியிடச் சூழலில் பதட்டம் காணப்படும். இருக்கும் சூழ்நிலைகேற்ப அனுசரித்து திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

தொடர்பாடலில் காணப்படும் குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். இது இருவரிடையேயான நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் அல்லது யோகா மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். சாவலான சூழ்நிலை காரணமாக பதட்டம் காணப்படும். இசை கேட்பது மற்றும் திரைப்படம் பார்த்தல் போன்ற நிகழ்சிகள் பதட்டத்தை விலக்கி உங்க ளுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். முறையாக திட்டமிடுவதன் மூலம் பணிகளை சிறப்பாக கையாள இயலும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான உறவை தக்க வைக்க எதையும் லேசாக எடுத்துக் கொள்ளும் அணுகு முறை தேவை.அமைதியின்மை உங்களுள் குழப்பத்தை ஏற்படுத்தும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்து வீர்கள். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

பண வரவு குறைந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -31.08.2023




இன்று எதிர்பாராத நன்மைகள் விளையும். இன்று நீங்கள் விரைந்து முடிவெடுப்பீர்கள். உங்கள் திறமை உங்கள் நண்பர்கள் உட்பட மற்றவரை ஆச்சரியப்படுத்தும். நீங்கள் கவனமாகவும் விழிப்புடனும் உங்கள் இலக்குகளை அடைவீர்கள்.

வேலையைப் பொறுத்த பொறுப்பு உங்களிடம் காணப்படும். நேர்மை மற்றும் அர்ப்பணிப்பான பணியின் மூலம் நீங்கள் உயர்வடைவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மகிழ்ச்சியுறச் செய்யும். உங்கள் நேர்மை காரணமாக இருவரிடையே நெருக்கமான பிணைப்பு ஏற்படும்.

பண வரவு உங்களை மகிழ்ச்சியுறச் செய்யும். சிறிது பணம் சேமிப்பீர்கள்.




இன்று உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். இதனால் உங்களுக்கு வருத்தமும், பதட்டமும், அமைதியின்மையும் காணப்படும். பிரார்த்தனை மற்றும் தியானம் மன அமைதி பெற உங்களுக்கு உதவும்.

பணியிடத்தில் உங்கள் செயல் திறன் உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும்.பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. கவனமாக பணியாற்றுவதன் மூலம் சிறப்பாக செயல்படலாம்.

உங்கள் துணையிடம் மிகவும் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் சுமூகமான பலன் கிடைக்காது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பணப்பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்வது கூட கடினமாக உணர்வீர்கள்.




இன்று சம்பவங்கள் சீராக நடைபெற அனுசரணையான அணுகுமுறை தேவை. உங்கள் செயல்களில் விவே–கம் வேண்டும். முக்கியமான விஷயங்களில் முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. சிறப்பான விளைவுகளைக் காண நீங்கள் திட்டமிட்டு முறையாக பணிகளைக் கையாள வேண்டும்.

உங்களிடம் காணப்படும் குழப்பமான உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உங்களிடையே காணப்படும் திருப்தி மற்றும் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்ய நேரலாம்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. உங்கள் வளர்ச்சியை தாமதப் படுத்தும் வகையில் இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். உங்கள இலக்குகளை அடைய முறையாக திட்டமிட வேண்டும்.

மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதால் உங்கள் மேலதிகாரிகளுடன் பேசும் போது அனுசரித்துச் செல்ல வேண்டும். பணிச்சுமை கவலை அளிக்கும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

குழப்பமான உணர்வின் காரணமாக உங்கள் துணையிடம் முரண்பாடு ஏற்படும். எனவே அத்தகைய உணர்வைத் தவிர்த்து உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

நிதிநிலை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.





